# ஆண்டின் பொதுக்காலம் 12 ஆம் வாரம்

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-06-25

*(இன்றைய வாசகங்கள்:*

*எரேமியா நூலிலிருந்து வாசகம்:* 20:10-13,

*திருப்பாடல்:* 69: 7-9, 13, 16, 32-34,

*திருத்தூதர் பவுல் ரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்:* 5:12-15,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் :* 10: 26-33)

*திருப்பலி முன்னுரை*

*ஆண்டின் பொதுக்காலம்* 12 *ஆம் வாரம் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்று இறையாசீர் பெற வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இறைமகன் இயேசு, கடவுளின் பராமரிப்பு பற்றி இன்றைய நற்செய்தியில் கூறுகிறார். பறவை இனத்தில் மிகவும் சிறியது சிட்டுக்குருவி. இந்த சிட்டுக்குருவிகள் எப்பொழுதும் உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனுமிருப்பதை காணலாம். அவைகள் எதைப்பற்றியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்த சிட்டுக் குருவிகள் மிக மலிந்த விலையில்* 1 *காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் கிடைத்திருக்கின்றன. இவ்வளவு மலிந்த, உருவத்தில் மிகச் சிறிய சிட்டுக் குருவிகளையே கடவுள் இவ்வாராக பராமரித்து வருகின்றார். ஆகவே கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நம்மை கடவுள் எவ்வளவாய் பராமரிக்கமாட்டார்? இவ்வுலகில் மாய்ந்து மாய்ந்து பொருள் தேடுவோர் ஏராளம். இவ்வுலக செல்வத்தை சேர்க்க எத்தகைய வழியையும் பின்பற்றி எப்படியும் வாழலாம் என்று மனம் போன போக்கில் முற்படுகின்றனர். இவர்கள் கடவுளின் அன்பையும் பராமரிப்பையும் கண்டுணராதவர்கள். "அஞ்சாதீர்கள்"என்ற அறைகூவல் நமக்கு கடவுளின் பராமரிப்பையும், அன்பையும் உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் நேரிய வழியில் வாழ உற்சாகத்தைக் கொடுக்கின்றது. ஆன்மாவையும், உடலையும், நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் என்ற இறைவாக்கிற்கேற்ப எந்த சூழ்நிலையிலும் தீய வழியை நாடாமல் கடவுள் காட்டிய நேரிய வழியிலும், உண்மையின் வழியிலும் வாழவும், நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழக்கூடிய வாழ்வையும் ஆண்டவரிடம் கேட்போம். தொடரும் இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*பணியாற்ற அனுப்புபவராம் இறைவா,*

*உமது பணிக்காக நீர் தேர்ந்துகொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது அறுவடையை மிகுதியாக்கும் உண்மையுள்ள பணியாளர்களாக செயல்பட உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*நிறைவாழ்வு அருள்பவராம் இறைவா,*

*உலகெங்கும் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் அனைவரையும், உமது இறையாட்சியின் கருவிகளாக மாற்றி உலகிற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்பே உருவான ஆண்டவரே,*

*எங்களை நீர் உம் சீடர்களாக அழைத்து, அமைதியின் கருவிகளாகச் செயல்பட ஆணையிட்டுள்ளீர். உம்மைப் போற்றுகிறோம். ஓநாய்கள்போல் எங்களைக் காயப்படுத்தக் காத்திருக்கும் உலகின் தீமைகள் அனைத்தினின்றும் எங்களைக் காத்தருள்வீராக. உமது உண்மையின் ஆட்சியை நிறுவுவதற்காக அனைத்து நாடுகளிலும் நற்செய்தி பணியாற்றும் மறைபணியாளர்கள் வழியாக, மாற்று சமய மக்கள் உமது அன்பையும் ஆறுதலையும் சுவைக்க அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*தேற்றரவு அளிப்பவராம் இறைவா,*

*உலகில் பல்வேறு சூழ்நிலைகளால் அமைதி இழந்து தவிக்கும் மக்கள் அனைவரும் உம்மை நாடி வரவும், தாயைப் போன்று தேற்றரவு அளிக்கும் உமது அன்பில் தாலாட்டப் படவும் வரம் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் எம்மைத் தேற்றும்;; தந்தையே இறைவா!*

*பல்வேறுவிதமான நோய்களாலும் தாக்கப்பட்டு வேதனையுறுவோர் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களுக்கு வேண்டிய நற்சுகத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*உலகில் ஏற்படும் மாற்றங்கள் எங்கள் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து, எங்கள் உள்ளங்களைக் கலக்கமடையச் செய்கின்றபோது நாம் நிலை குலைந்து போகாமல், உமது வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதில் உறுதியோடு காத்திருக்கும் நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*